# அண்ணல் அம்பேத்கரை அவமதித்த அமித்ஷாவைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!



திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களை அவமதிக்கும் வகையில் பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், கு.கருணாநிதி, பொன்.முத்து, எஸ்.பன்னீர்செலவம், பிரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், க.சௌந்தரராசன், ஆராஞ்சி ஆறுமுகம், சி.மாரிமுத்து, மேயர் நிர்மலா வேல்மாறன், சு.ராஜாங்கம் உட்பட பலர் உள்ளனர்.



டாக்டர் அம்பேத்கர் அவர்களை இழிவுபடுத்தி பேசிய அமித்ஷாவைக் கண்டித்து சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் தலைமைக் கழகம் ஆணையேற்று மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமையில் மேயர்.பிரியாராஜன் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



திருப்புவனத்தில் மேற்கு கிழக்கு பேரூர் தி.மு.க. சார்பில் மானாமதுரை பஸ் நிறுத்தம் அருகில் அமிர்ஷாவைக் கண்டித்து மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மேற்கு ஒன்றியச் செயலாளர் வசந்திசேங்கைமாறன். நாகூர் கனி, மூர்த்தி, ரகமத்துல்லாகான், பொற்கோ, ஈஸ்வரன், வெங்கடேசன், அக்னிராஜ் ரவி.மகேந்திரன், சுப்பிரமணியன், இளங்கோவன், சக்தி முருகன், மீனாட்சிசுந்தரம், சேகர், மணிகண்டன், ரவிச்சந்திரன், ராஜா, தேவதாஸ் அறிவுக்கரசு, கண்ணன், தொ.மு.ச. பிச்சை, காளிதாஸ், பாண்டியகிருஷ்ணன், அண்ணாமலை மற்றும் கிளைக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவு செய்த அமித்ஷாவைக் கண்டித்து சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி இளையான்குடி கண்மாய் கரையில் இளையான்குடி வடக்கு ஒன்றியச் செயலாளர் சுப.மதியரசன் தலைமையில் பேரூர்ச் செயலாளர் பி.ஏ.நஜ்முதீன், ஆறு.செல்வராசன், கா.வெங்கட்ராமன், வே.தமிழ்மாறன் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் த.உதயக்குமார், முருகானந்தம், சி.அய்யாச்சாமி, கி.கண்ணன் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை, புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களை அமித்ஷா அவமதித்து பேசியுள்ளதைக் கண்டித்து சிங்கம்புணரி ஒன்றிய நகர தி.மு.க. சார்பில் சிங்கம்புணரி பேருந்து நிலையம் முன்பு உள்ள அண்ணாசிலை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் அ.கணேசன், ஒன்றியச் செயலாளர்கள் பூமிநாதன், பாலசுப்பிரமணியன், சேர்மன் அம்பலமுத்து, இந்தியன் செந்தில், நகரச் செயலாளர் கதிர்வேல், நகர அவைத் தலைவர் சிவக்குமார், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவபுரிசேகர், ஸ்ரீலாதேவி, சொக்கநாதன், ஆர்.புகழேந்தி, அலாவுதீன் மனோகரன், குடோன்மணி, செந்தில் , கிருஷ்ணன், பிரேம்குமார், பொன் சரவணன், பார்த்திபன், சையது ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை, புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் திருப்பத்தூர் லட்சுமி கேப் அருகில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ., ஆர்.எஸ். ஆனந்தன், எஸ்.ராஜேந்திரன், ம.முத்தமிழ்ச்செல்வி, டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், கே.பி.ஆர்.ஜோதிராஜன், சி.சத்தியமூர்த்தி, மு.அசோகன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



சிவகங்கை மாவட்டம். காரைக்குடியில் அண்ணல் அம்பேத்கர் சிலை முன்பாக, உள்துறை அமைச்சர் அமித்ஷா அண்ணல் அம்பேத்கர் குறித்து அவதூறாக பேசியதைக் கண்டித்து மாநகரச் செயலாளர் என்.குணசேகரன் தலைமையில் துணை மேயர் எஸ் முத்துதுரை முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களை இழிவாக பேசிய அமித்ஷாவைக் கண்டித்து ஆண்டிபட்டி இந்தியன் வங்கி முன்பு ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ராஜாராம், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், பேரூர்ச் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் சட்டமன்றத் தொகுதி சார்பாக அண்ணல் அம்பேத்கரை இழிவு செய்த அமித்ஷாவைக் கண்டித்து விருது நகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் தலைமையில், விருதுநகர் நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் நகர் மன்றத் தலைவர் எஸ்.ஆர்.எஸ்.மாதவன், விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, பொதுக் குழு உறுப்பினர் மதியழகன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம். பள்ளத்தூர் பேருந்து நிலையம் முன்பாக அண்ணல் அம்பேத்கர் குறித்து அவதூறாக பேசிய அமித்ஷாவைக் கண்டித்து பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி தலைமையில் ஒன்றியச் செயலாளர் கே.ஆர்.ஆனந்த் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.